ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

रक्ष्योऽहं भवता महेश सकलं त्यक्त्वा विचारं द्रुतं
पुण्यं नातनुते भवानिति वृथा नोयुक्तमेतद्वचः।
वेदास्त्वत्प्रभवावदन्ति विशदं सत्योक्तयस्त्वां विना
नोशक्तिश्च लितुं हि कस्यचिदपीत्यस्यार्थमालोचय ॥

𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑍋𑌽𑌹𑌂 𑌭𑌵𑌤𑌾 𑌮𑌹𑍇𑌶 𑌸𑌕𑌲𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌚𑌾𑌰𑌂 𑌦𑍍𑌰𑍁𑌤𑌂
𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌨𑌾𑌤𑌨𑍁𑌤𑍇 𑌭𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 𑌵𑍃𑌥𑌾 𑌨𑍋𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍇𑌤𑌦𑍍𑌵𑌚𑌃।
𑌵𑍇𑌦𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑌵𑌾𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌵𑌿𑌶𑌦𑌂 𑌸𑌤𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾
𑌨𑍋𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚𑌲𑌿𑌤𑍁𑌂 𑌹𑌿 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌦𑌪𑍀𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌮𑌾𑌲𑍋𑌚𑌯 ।

ஹேமஹேச! ஸகல ஜகத்திற்கும் ஈசனாய் விளங்கும் ஹே சம்போ! இவன் பாபம் செய்திருக்கிறனா அல்லது புண்ய கர்மாவைச் செய்திருக்கிறனா அக்கர்மாக்களும் எவ்விதம் எந்த ஸமயம் செய்திருக்கிறன் என்கிற இவை முதலான விசாரங்களை ஒன்றையும் செய்யாமல் உம்மால் நான் சீக்கிரமாக ரக்ஷிக்கத்தகுந்தவன் நீ புண்யகர்மாவை அனுஷ்டிக்கவில்லை ஆகையால் நான் உன்னைப் பாதுகார்க்கமாட்டேன் என்று பயனில்லாதஇவ்வார்த்தையைக்கூறுவதில் உபயோகமில்லை. ஏனென்றால் உம்மால் வெளியிடப்பட்டதாயும் உண்மையான வசனங்களையுடைய வேதங்கள் உம்மையன்றியில் அற்பம் சலிப்பதற்குக் கூட ஒரு வஸ்துவிற்கும் ஸ்வயமாக சக்தியில்லை என்று ஸ்பஷ்டமாக முறையிடுகின்றன. இதின் கருத்தைத் தாங்களே ஆலோசித்துப்பாருங்கள்.

ஹே ஈச! உலகிலுள்ள எந்தப்பிராணியும் உம்முடைய ஏவுதலன்றித் தானாக நல்ல காரியத்தையோ கெட்டகாரியத்தையோ செய்யக்கூடிய சக்தி பொருந்தியதல்ல. எதைச்செய்தாலும் உம்முடைய ஏவுதலால்தான் செய்யவேண்டுமென்று சுருதி வசனங்கள் ஸ்பஷ்டமாய் அறிவிக்கின்றன. ஆகையால் பாபியென்றும் புண்ணியசாலியென்றும் பிரித்துச் சிலரை விலக்கி சிலரைச்சேர்க்காமல் ஸகல ஜனங்களையும் பக்ஷபாதமில்லாமல் பாதுகார்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். சுபம்!

**உபபத்திராதிபர்**

# ஸம்ஸ்காரம்.

## 6-வது அன்னப்பிராசனம்.

(51-வது பக்கத்தொடர்ச்சி)

இதை ஆருவது மாதத்திலாவது, எட்டாவது மாதத்திலாவது பற்கள் முளைத்தபிறகாவது அவரவர்கள் குலத்தில் வழக்கமாய் அனுஷ்டித்துவந்த மங்களகரமான காலத்திலாவது செய்யவேண்டியது. பிறந்து 150-நாள்களுக்கு மேற்பட்டு 180-நாளுக்குள்பட்டு செய்வது மிகவும் உத்தமம். அவரவர்களது கிருஹ்யசூத்திரத்தில் கூறியவாறு சுபதினத்தில் நாந்தீ சிராத்தம் செய்து பிதிருக்களைத் திருப்திசெய்துவைத்து, பிராமணர்களைக்கொண்டு ஆசீர்வாதம் செய்வித்து, தயிர் தேன் நெய் அன்னம் இவைகளைத் தங்கப் பாத்திரத்தில் கலந்து வைத்துக்கொண்டு, தேவதைகளின் ஸன்னிதிக்கு முன்பாக அன்னையின் மடியில் குழந்தையை, மங்களஸ்னானம்செய்வித்து அலங்கரித்துக் கிழக்குமுகமாக உட்காரவைத்து தேன், நெய், ஸுவர்ணம் இவைகளோடு கலந்து அன்னத்தைக் குழந்தைக்கு மந்திரபூர்வகமாகக் கொடுக்கவேண்டும். இவ்விதமாக அன்னப்ராசானம் செய்வித்தபிறகு தாயாரின் மடியிலிருந்து குழந்தையைஇறக்கிவிடவேண்டும். புருஷக்குழந்தைகளுக்கு இரட்டைப்பட்ட மாதங்களும், ஸ்திரீ குழந்தைகளுக்கு ஒத்தைப்பட்ட மாதங்களும் சுபங்களாம். இதற்குறித்தான திதி வார நக்ஷத்ராதிகளும் லக்கினுதிகளும் நவக்கிரஹங்களின் ஸ்தான விசேஷங்களும்முகூர்த்தக்கிரந்தங்களில்கூறப்படுகிறபடிபார்த்துச் செய்யவேண்டியது. அன்னப்ராசனமான பிறகும் ஒவ்வொரு பதார்த்தங்களாகப் புதிதுபுதிதாகக் கொடுக்கும்பொழுது நாள் பார்த்துக்கொடுக்கவேண்டியது. புதிதாக விளைந்து வந்ததைச் சாப்பிடும்பொழுதும் நாள் பார்த்து தேவதைபிதுருக்கள் முதலியவர்களுக்குத் திருப்திசெய்துவைத்துவிட்டுப் புசிக்கவேண்டுமாம்; குழந்தைகளுக்கு ஸ்தன்யபானத்தோடு (முலைப்பால் குடிப்பதோடு)

மாத்திரமிருக்கும் ஸமயமும் ஸ்தன்யம் அன்னம் இவைகளிரண்டையும் சேர்த்து உபயோகப்படுத்தும் ஸமயமும் அன்னத்தை மாத்திரம் புசிக்கும் ஸமயமுமாக மூன்று ஸமயபேதங்களுண்டு. அன்னப்பிராசனத்திற்கு முந்திய தருணம் முதலாவது ஸமயமாகும். அதற்குப்பிறகு பற்கள் முளைக்குந்தருணம் வரை 2-வது ஸமயம். பற்கள் முளைத்துவிட்டால் பிறகு ஸ்தன்யங் கொடுக்கக் கூடாது. கிரமமாக அதை விலக்கிவிட வேண்டியது.

“ अथैनं जातदशनं क्रमादपनयेत्स्तनात् ”

𑌅𑌥𑍈𑌨𑌂 𑌜𑌾𑌤𑌦𑌶𑌨𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌦𑌪𑌨𑌯𑍇𑌤𑍍𑌸𑍍𑌤𑌨𑌾𑌤𑍍 ।

என்று வைத்திய சாஸ்திரங்களில் இந்த விஷயம் விரிவாகச் சொல்லப்படுகின்றது. எப்பொழுதும் ஸாத்விக ஆஹாரங்களையே உபயோகப்படுத்தும் வழக்கத்தை விருத்தி செய்யவேண்டியது. கெட்ட ஆஹாரத்தை ஒரு பொழுதும் உபயோகிக்கக்கூடாது. புசிக்கப்படும் வஸ்துக்கள் ஸ்வபாவத்தாலும் வேறு வஸ்துக்களோடு சேறுவதாலும் அந்த வஸ்துக்களின் சொந்தக்காரனது தோஷத்தாலும் கெட்டுப்போகின்றனவாம். ஆகவே இயற்கையாகவே கெட்டதாயிருக்கும் பதார்த்தங்களையும் கலப்பினால் கெடுதலையடையும் பதார்த்தங்களையும், சொந்தக்காரன் தோஷத்தால் கெடுவதையும் நன்றாய் கவனிக்கவேண்டும். அந்தக் கெடுதல் எம்மாதிரியுள்ளது என்பதையுமுணரவேண்டும். இவைகளைப்பற்றி நமது ஸ்மிருதிகள் புராணங்கள் கூறியிருப்பதை வைத்தியசாஸ்திர நூல்களும் சோதிடசாஸ்திரத்தின் ஸம்ஹிதை நூல்களும் சரியான காரணங்களுடன் விரிவாய்க் கூறுகின்றன. அன்னப் பிராசனப் பிரஸங்கத்தால் அவைகளையும்பற்றி சிறிது கூறுவாம். சுபம்!

பத்திராதிபர்.

---

# வர்ணாச்ரமதர்ம மஹாநாடு

## தீர்மானங்களின் விபரம்.

சென்னை ஹிந்து ஹைஸ்கூல் மண்டபத்தில் சென்றமாதம் 29, 30, 31-ந் தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய வர்ணாச்ரம தர்ம மஹாநாட்டில் கீழ்கண்ட தீர்மானங்கள் விவாதத்திற்குப் பின் அங்கீகரிக்கப்பட்டன.

வர்ணாச்ரம தர்மாநுஷ்டானத்தை சம்ரக்ஷிப்பதும் அதற்கு ஆதாரமான பரம்பரையான ஜாதி தர்மங்களேயும், குலதர்மங்களே யும் விடாமல் அநுசரிப்பதும் இந்தியர்களுடையவும் மற்ற லோக ஜனங்களுடையவும், ஒற்றுமைக்கும், க்ஷேமலாபங்களுக்கும், மிக அவச்யமென இம்மஹாநாடு அபிப்பிராயப்படுகிறது. வர்ணாச்ரம தர்ம விதிகளில் இஷ்டப்படி தலையிடுவதும் அதன் அனுஷ்டானத் தில் இடையூறுண்டுபண்ணுவதும் இந்தியர் ஒற்றுமையும் முன் னேற்றமும் அடைவதற்குப் பெறிய தடையாகுமென்றும் இம் மஹாநாடு தீர்மானிக்கின்றது.

2. கர்மானுஸாரியாகப்பிறப்புண்டாகிறதென்கிற சாஸ்திரத் தை அனுஸரித்து ஒவ்வொரு ஜீவனும் தன் ஸம்ஸ்காரத்திற்கே ற்ற வகுப்பில் பிறக்கின்றுனென்றும் அந்தப் பிறப்புமூலமே அந்த ஜீவன் அநுஷ்டிக்கவேண்டிய முறையை நிர்ணயித்து அந்த ஜீவனின் உஜ்ஜீவனத்திற்குக் காரணமாகிறதென்றும் ஆகையால் ஒவ்வொரு ஜீவனும் தம்தம் பிறப்பிற்குறிய கடமைகளேச் சரிவர செய்வதே ஆத்மசிரேயேஸ்ஸையும் ஸமூகஅபிவிருத்தியையும்உண்டு பண்ணக்கூடுமென்றும் இச்சபையினர் தீர்மானிக்கின்றனர். வர் ணாச்ரமிகளான ஹிந்துக்கள் ஸம்ஸ்கிருதபாஷையைக் கற்கவேண் டியது மிகவும் அவச்யமாகையால் ஹிந்து வகுப்பு வாலிபர்களு க்கு ஸம்ஸ்கிருதக் கல்வியைபோதிக்க வர்ணாச்ரமிகள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த சபை கேட்டுக்கொள் ளுகிறது.

3. வர்ணாச்ரம தர்மானுஷ்டானத்திற்கு அதைப்பற்றிய கல்வியும் அறிவும் ஏற்படவேண்டியது அவச்யமாகையால் அக் கல்வியை கலாசாலைகளிலும் பள்ளிக் கூடங்களிலும் போதிக்க வேண்டும். வேதசாஸ்திரம் ஆகமம் முதலியவற்றில் உபதேசிக் கப்படடிருப்பவைகளே சிருவர்களுக்குப் போதிக்கவும், வர்ணாச்ரம தர்மப்பிரசாரம்செய்யவும் ஒவ்வொரு நகரங்களிலும் தகுந்த ஸ்தா பனங்களே ஏற்படுத்தவேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக் கிறது.

4. சாஸ்திர ஸம்மதமான தீண்டாமை விதிகள் ஸமூகக்ஷே மத்தை உத்தேசித்து உண்டானவை என்றும் அவ்விதிகளால் தேச ஐக்கியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் யாதொரு தடையு மில்லை என்றும் இந்த சபை தீர்மானிக்கிறது.

5. விஜாதீயர்களுடைய ஸமபங்திபோஜனம் கலப்பு விவாஹம் முதலியன சாஸ்திரங்களில் ஆக்ஷேபிக்கப்பட்டிருப்பது தற்காலம் சமூக ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாகாதென்றும் ஹிந்துமத ஸம்ரக்ஷணத்திற்கு இந்த சாஸ்திரவிதிகள் அவச்யமென்றும் இச்சபை தீர்மானிக்கிறது.

6. வர்ணாச்ரம தர்மிகளுள் விவாஹங்களில் வரசுல்கம் கன்யாசுல்கம் முதலியவை நிர்பந்தித்து வாங்கப்படும் வழக்கத்தை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது. இவ்வழக்கம் சாஸ்திரவிரோதமாக இருப்பதுடன் கன்னிகைகள்ருதுமதியாவதற்குமுன் உசித காலத்தில் தகுந்தபடி கன்னிகாதானம் செய்து கொடுக்கப்படுவதற்கு இது ஒரு தடையாகவிருப்பதாலும் இந்த வழக்கத்தை ஒழிக்கவேண்டிய முறைகளை வர்ணாச்ரமிகள் உடனே அனுஷ்டிக்கவேண்டுமென்று இக்கூட்டம் வற்புறுத்துகின்றது.

7 ஸநாதன தர்மத்தை அனுசரிக்கும் ஹிந்துக்களின் மதாசாரங்களில் அரசாங்கத்தார் சட்டங்கள் மூலம் தலையிடுவதை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது. ஹிந்து ஸ்திரீ புருஷர்களுடைய விவாஹவயதை நிர்ணயிக்க இந்தியா சட்டசபையிலும் சென்னை சட்டசபையிலும் கொண்டுவரப்பட்டிருக்கும்மசோதாக்களையும் பலமாக எதிர்க்கின்றது.

8. தேவஸ்தான ஸொத்துக்கள் சாஸ்திரமுறைப்படி தேவஸ்தான வைதிககர்மாக்களையும் நிர்வாகத்தையும் நடத்தவுமே உபயோகிக்கப்படவேண்டும். இவை தவிர வேறு வழிகளில் விநியோகிக்கக் கூடாது. அவ்விதம் விநியோகிக்கச் செய்யப்படும் முயற்சியை இக்கூட்டம் கண்டிக்கிறது.

9. ஹிந்துமதஸ்தாபன சட்டத்தின்கீழ்அமைக்கப்பட்டுள்ள தேவஸ்தான நிர்வாகபோர்டார் முதல் ஸகல அதிகாரிகளும் தேவாலயம் ஸம்ப்ரதாயத்திலும் பூஜை முதலிய சாஸ்திரீய கர்மங்களிலும் தங்களுக்கு முழுநம்பிக்கையிருப்பதாக நியமனமாகும் முன்னர் உறுதிமொழி கொடுக்கவேண்டுமென இம்மஹாநாடு தீர்மானிக்கிறது.

10 வர்ணாச்ரம தர்மானுஷ்டானத்திற்குஅவச்யமானபுரோஹிதர்கள் வேதம் க்ருஹ்யசூத்திரம் முதலியவற்றிலும் வைதிக கர்மங்களைச் செய்துவைப்பதிலும் தேற்சிபெற்றவர்களாகஇருக்குமாறு தகுந்த ஸாதனங்களையும் வஸதிகளையும் உண்டுபண்ண வே

ண்டுமென்றும் அவர்களுக்கு வேண்டிய ஆதரவையளிக்க வேண்டுமென்றும் இம்மஹாநாடு முடிவு செய்கிறது.

11. இராஜீய விஷயங்களை முடிவு செய்வதற்காக ஏற்பட்டுள்ள ஸ்தாபனங்களில் வர்ணாச்ரம விஷயங்களைப்பற்றிச் சர்சை செய்து முடிவுசெய்வதை இக்கூட்டம் கண்டிக்கிறது. அவ்விதம் பொதுஸ்தாபனங்களில் விவாதத்திற்குறிய இம்மாதிரி விஷயங்களைச்சற்சை செய்யக்கூடாதென்று அந்த ஸ்தாபனங்களிலுள்ளவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

12. விக்டோரியா மஹாராணி மஹாசாஸனத்தில் அளிக்கப்பட்டுள்ள உறுதிமொழிக்கு விரோதமாகக் கவர்ன்மெண்டார் ஹிந்துமதாசாரங்களில் தலையிடக்கூடாதென்றும் மதாசாரத்திற்கு விரோதமானவர்களிடம் ஹிந்துமதாசார ஸம்ரக்ஷணத்தை ஒப்படைக்கக் கூடாதென்றும் இகூட்டம் தீர்மானிக்கிறது.

13. வர்ணாச்ரம தர்மப்ராசாரத்திற்காக ஸம்ஸ்கிருதம் ஆங்கிலம் தேசபாஷை ஆகியவற்றில் பத்திரிகைகளைப் பிரசுரிக்க வேண்டுவது அவச்யமென்றும் ஆசாரியஸ்தானத்தை வகிக்கும் மடாதிபதிகள் ஸநாதனதர்ம ப்ராசாரத்திற்கான பிருவிருத்திகளில் அதிக ஆதாவுகாட்டி வரவேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

14, இந்த நாட்டில் துர்நடத்தையைத் தொழிலாகக் கொண்டு ஜீவிக்கும் ஸ்திரீகளை அவ்விதம் செய்வதினின்றும் தடுப்பதற்காகச் சட்டமூலமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் இச்சபையாருக்கு ஆக்ஷேபமில்லை ஆனால் தேவாலயங்களில் தேவதாஸிகளாக தேவகைங்கர்யங்களைச் செய்துகொண்டிருப்பவர்கள் அந்தக் கைங்கர்யத்தை இனியும் செய்துவரவேண்டும் என்றும் தேவதாஸிகளாகவிருக்கும் ஒரு காரணத்தை முன்னிட்டு மட்டும் அவர்கள் சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டத்தை இக்கூட்டம் எதிர்க்கிறது.

முடிவில் இம்மஹாநாட்டின் நோக்கங்களை இடைவிடாமல் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அவ்வப்பொழுது எடுத்துக்கொள்ளவேண்டியதற்காக ஒரு நிரந்தாக் கமிட்டியும் இக்கூட்டத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறது. சுபம் !

வெ. ஸோமதேவசர்மா.

# பாரிதோஷிக ஸபை.

சிதம்பரம் ரா. ம. சு. வேதசாஸ்திர வித்தியாசாலையில் பிரபவ வருஷம் மார்கழி-மீ 23௳ [7-1-1928] பிற்பகல் 4-மணிக்கு சென்ற வருடத்திய வார்ஷிக பரீக்ஷையில் தேறின மாணவர்களுக்கு பிரைஸ் அளிக்க பாரிதோஷிக ஸபை நடந்தேறியது.

மேற்படி ஸபையில் மைலாப்பூர் ஸம்ஸ்கிருதகாலேஜ் பிரின்ஸிபல் மஹாமஹோபாத்தியாய வெங்குடுசுப்பாசாஸ்திரிகள் அவர்கள் அக்கிராஸனம்வஹித்தார்கள். மஹாமஹோபாத்தியாய தண்டபாணி ஸ்வாமிதீக்ஷிதர் அவர்கள் முதலான அனேக வித்வான்களும் மற்றுமுள்ள கனதனவான்களும் நகரத்தார்கள் அனேகரும் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸபையில் முதலில் யஜுர்வேத ஸாமவேதகோஷங்களுடன் மங்களாசரணம் நடந்தபின் சாஸ்திரமாணவன் ஒருவனால் வியாகரணம் என்ற விஷயத்தைப் பற்றி ஒரு வியாஸம் படிப்பிக்கப்பட்டது. பிறகு அக்கிராஸனரின் முகவுரை நடந்தபின் ஷை பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் M. N. இராகவசாஸ்திரிகளவர்களால் சென்ற வருடத்திய ரிபோர்ட்டு படிக்கப்பட்டது. (இத்துடன்ரிபோர்டும்அனுப்பப்பட்டிருக்கிறது. அதையும்தயவுசெய்து இவ்விடத்தில் அச்சிடக்கேட்டுக்கொள்ளுகிறோம்.) மஹாமஹோபாத்தியாய தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதரவர்கள், மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் வ்யாகரண ப்ரொபஸர் ராமசுப்பாசாஸ்திரிகள், சிதம்பரம் ஸம்ஸ்கிருதகாலேஜ் ப்ரொபஸர் பரமேச்வரசாஸ்திரிகள் சிவராமகிருஷ்ணசாஸ்திரிகள் முதலானோர்கள் ஷை பாடசாலையைப்பற்றி மிகவும் புகழ்ந்துபேசினார்கள். பிறகு அக்கிராஸனரின் உபன்யாஸம் நடந்தது. அதில் மேற்படி பாடசாலையில் மீமாம்ஸா முதலான வகுப்புகளில் சிரோமணி கிளாஸ் வைப்பது முதலான பாடசாலையின் முன்னேற்றத்தைப் பற்றியும் சாஸ்திரப்பிள்ளைகளுக்கு அத்தியயன ஸம்பந்தமும். அத்யயனம்செய்கிற பிள்ளைகளுக்கு சாஸ்திரபாடத்தில் பிரவேசமும் உண்டுபண்ணுவதைப்பற்றியும் மிகவும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தார்கள்.

முடிவில் தாம்பூலம் வழங்கப்பட்டு ஸபை கலைந்தது.

S. கிருஷ்ணமூர்த்தி, வியாகரணவித்யார்த்தி.

## விவாஹவயது மசோதாக் கண்டனக் கூட்டங்கள்.

### திருவிடைமருதூர்.

இவ்வூரில் 15-2.28 காலை 9-மணிக்கு ரிடைர்ட் பிர்ம்மஸ்ரீ டிஸ்டிரிக்ட் ஸப்ரிஜிஸ்தார் கிருஷ்ணஸாமி அய்யர் அவர்கள் பங்களாவில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. ரிடைர்ட் தாசில்தார்பிரம்மஸ்ரீ ராமச்சந்திரய்யர், வக்கீல் ஸ்ரீபாலசுப்பிரமணியய்யர், ஸ்ரீகல்யாணபுரம் வேப்பத்தூர் நரஸிம்மய்யர், ஸ்ரீ ரிடைர்ட் இஞ்சினீர்கள் முதலான பல கனவான்களும், ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசக ப. பஞ்சாபகேசசாஸ்திரிகள் ஸ்ரீவத்ஸ வெ ஸோமதேவ சர்மா கிருஹ்யக்ஞ ஸ்ரீஉமாமகேஸ்வரசாஸ்திரியள் அர்ஜுனகவி முதலான பண்டிதர்களும் மற்றும் பல ஜனங்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீராமச்சந்திரய்யர்அவர்கள் தலைமையின்கீழ் ஸ்ரீ கவிரத்னம் ஆர்யதர்மம் பத்திராதிபர் ப. பஞ்சாபகேச சாஸ்திரியள் ஷை மசோதாவைக் கண்டித்துத் தீர்மானத்தைப் பிரேரேபித்தார். ஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா 1-மணிநேரம் அதை ஆமோதித்து வெகுஅழகாய் உபன்யஸித்தார்கள். உடனே ஏகமனதாய் ஷை தீர்மானம் எல்லோராலும் ஆமோதிக்கப்பட்டு கவர்னருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

### சீர்காழி.

இந்தஊரில் 15-2-28மாலையில் பிர்ம்மஸ்ரீ குன்னம் சுப்பிரமணிய அய்யரவர்கள் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் முத்துஸாமிஅய்யர், வக்கீல் சுந்தரமய்யங்கார் முதலானபல பிரமுகர்களும், ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் கவிரத்னம் ப. பஞ்சாபகேசசாஸ்திரியள், ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா, கிருக்யக்ஞ ஸ்ரீ உமமஹேச்வர சாஸ்திரியள், முதலானபண்டிதர்களும் பின்னும் அநேகஜனங்களும் கூடியிருந்தார்கள். வக்கீல் மகா-ா-ஸ்ரீ சுப்பிரமணியய்யரவர்கள் அக்ராசனத்தின் கீழ் கிருஹ்யக்ஞ உமாமகேச்வர சாஸ்திரியள் சாஸ்திரீயமாய் இம்மசோதா சரியல்லவென்று கண்டித்து அரைமணி நேரம் உபன்யஸித்தார். பிறகு ஸ்ரீமடம் வித்வான் ப. பஞ்சாபகேச சாஸ்திரியள் ஷை மசோதாவை சாஸ்திரங்களாலும், யுக்திகளாலும் ஆசாரங்களாலும் நன்கு கண்டித்து எவ்விதத்திலும் இந்த மசோதா இந்துக்களுக்குப் பெரும் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியதாகையால் இதைஅடியோடு விலக்கவேண்டுமென்று 1மணி

நேரம் உபன்யஸித்துக் கொண்டுவந்த தீர்மானத்தை ஸ்ரீ வெ. ஸோமதேவசர்மா அவர்கள் இதற்கு ஸாதகமாக மேனாட்டார்களுடைய சிலகொள்கைகளையும் நம்சாஸ்திரங்களையும் மேற்கோளாகக் காட்டி இதைஆமோதித்தார்கள். ஸபையிலுள்ளவர்களால் ஏக மனதாய் அங்கீகரிக்கப்பட்டு இத்தீர்மானம் கனம் கவர்னர் அவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது.

ஒ. சிறுவயல்.

(1) இந்த ஊரில் 11—2—28-ல் ஸ்ரீராமகதாமிருதவர்ஷண ஸபையில் ஸிகிர்டேரியின் வரவேற்புக்குட்பட்டு, ஸநாதநதர்மப் பற்றுள்ள ஆஸ்திகஜனங்கள் யாவரும் இரவு 7-மணிககுக் குழுமினர்.

(2) பிர்மஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர், பிர்மஸ்ரீ சிவராமய்யர் முதலானவர்களின்பிரேரேபணத்திற்கிணங்கி பிர்மஸ்ரீ K. R, விசுவநாதசாஸ்திரிகள் தலைமை வகித்தனர்.

(3) ஸபையோர்களின் கரகோஷத்திற்கிடையில் தலைவர் அவர்கள் பிரகிருதம் டில்லி சட்டஸபையிலும் சென்னை சட்டஸபையிலும் ஸ்ரீ ஹரிவிலாஸ் சாரதா, டாக்டர் ஸ்ரீமதிமுத்துலக்ஷ்மி ரெட்டியார் இவர்கள் கொண்டுவந்திருக்கும் 2 விவாஹஸம்மந்தமான பில்களும் எல்லா அம்சத்திலும் நம்மை பாதிக்கக்கூடியவைகளேயன்றி நன்மைபயக்கப்பிறந்தவையல்லவென்று தொடங்கி அதன் ஸ்வரூபத்தையுமெடுத்துக்காட்டி மநு முதலிய நம் அவதார புருஷர்களின் மகிமையைக்காட்டும் விவாஹஸம்பந்தமான தர்மசாஸ்திரங்களின் ஸித்தாந்தத்தையும் மஹாமஹோபாத்யாய பிர்மஸ்ரீ யசச்சரீரர்களான கணபதிசாஸ்திரிகள் அவர்களால் இயற்றப்பட்ட வயோநிர்ணயம் என்ற கிரந்தத்தின் அருமை பெருமையையும் அதனிலுள்ள ஸித்தாந்தவிஷயங்களையும் நம் சாஸ்திரரீதியாய் அனுஷ்டிப்பதால் உண்டாகும் பயன்களையும்அவ்விதமில்லாவிடில் இகபர ஸுகமின்மையும் பாமரர் மனதிலும் பதியும்படி நன்குவிளக்கிக்காட்டி நம்பழக்கங்களுக்கும் முன்னோர்களின் அபிப்பிராயத்திற்கும் நன்மைக்குக்காரணமானவைகளையே தீமைக்குக் காரணமாகக் காட்டி முரண்பாடக ஏற்பட்டிருக்கிற ஷை மசோதாக்களைக்கண்டித்து விக்டோரியா மஹாராணியாரின் திருவாக்கையும் காண்பித்து இந்த பில்களை சட்டமாக்கக் கூடாதென்று சென்னை கவர்னர் ராஜப்ரதிநிதி அவர்களுக்கு மனு

மூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேணுமென்றும் இன்னும் பல விஷயங்களையும் விரித்துக் கூறி ஷை ஸபையில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீகாஞ்சீ காமகோடிபீடாதிபதிஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் திருவுருவப்படத்தை தியானித்து தரிசித்து இந்த ஆசாரியாள் செய்யும் ஸனாதன தர்ம ஸ்தாபன முயற்சியையும் சிஷ்யஜனங்களிடத்திலுள்ள அவ்யாஜ கருணையையும் எடுத்துரைத்து அவர்களின் பூர்ணனுக்கிரகத்தால் ஐயமின்றி நமது காரியம் வெற்றி பெறுமென்று உபந்யஸித்து ஸபையிலுள்ளோர் யாவரும் ஷை கண்டனங்களை ஏற்றுக்கொண்டதின் பிறகு கண்டனத்தீர்மானங்களைக்கையெழுத்திட்டு கவர்மெண்டாருக்குத்தபால் மூலம் அனுப்பும்படிக்கு ஸிகிரிடேரி அவர்களைக்கேட்டுக்கொண்டு கரகோஷத்துடன் ஆஸனத்தில் அமர்ந்தார்கள்.

பிறகு T. V. ஸ்வாமிநாதசாஸ்திரிகள் அவர்களும் பல கஷ்டங்களை விளைவிக்கும் இக்கொடுங் கலிகாலத்தில் இவ்விதச்சட்டங்களுமேற்படுமானல் சொல்ல வேண்டியதில்லை. ஆதலால் அக்ராஸனர் இனிய சொற்களால் விளக்கியபடி காருண்ய கவர்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று பல பிரமாணங்களோடு சபையோர்பிரமிக்க இன்மொழிகளைப்பொழிந்தனர்.

பின்னர் அக்ராஸனர் பின்னுரை கூறியதும் ஆசார்யாள் கவர்மெண்டார் ஸபை ஸனாதனதர்மம் ஸபையோர்கள் யாவருக்கும் வாழ்த்துக்கூறி சந்தன தாம்பூலம் வழங்கி ஆசார்ய உருவத்திற்குக்கற்பூரம் நீராஜனஞ்செய்து பிரார்த்தனை புரஸ்ஸரமாக 11 மணிக்கு இனிது ஸபை நிறைவேற்றப்பட்டது. சுபம்!

டி. வி. ஸ்ரீநிவாசய்யர்
ஸிகிர்டேரி.

### கண்டரமாணிக்கம்.

இராமநாதபுரம்ஜில்லா கண்டரமாணிக்கத்தில் ஆர்யதர்மஸம்வர்த்தனீஸபையின் ஆதரவில் 6—2—28-ல் கூடிய கூட்டத்தில் ப்ருமஸ்ரீ அழ. வெங்கடாசலமய்யங்காரவர்கள் அக்ராஸனத்தின் கீழ் அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

இந்தியா சட்டசபையிலும் சென்னை சட்டசபையிலும் கொண்டுவரப்போகிற விவாஹ வயது நிர்ணய மசோதாவானது இந்துக்களின் சாஸ்திரங்களுக்கும் ஆசாரங்களுக்கும் மதத்திற்கும்

க்ஷேமத்திற்கும் நேர் விரோதமாயிருப்பதால் அதை இந்த ஸபையில் அழுத்தமாய்க் கண்டிக்கப்பட்டு இது சட்டமாகக்கூடாதென்று கனம் டில்லி ராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் சென்னை கனம் கவர்னர் அவர்களுக்கும் மஹஜர்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

V. விச்வநாதய்யர்.

குன்னியூர.

மன்னார்குடி தாலூகா:— ஷை யூர் வாணீவிலாஸ சங்கத்தின் ஆதரவில் கூடிய இந்தக்கூட்டம் சென்ற 19—2—28-ல் ஷை யூர் அக்ரஹாரம் ஆனந்தேச்வரஸ்வாமிசந்நிதியில் மாலையில் கூடியது ஸ்ரீ ஸ.சுப்பிரமணிய அய்யர்பிரும்மஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்திசாஸ்திரிகள் அவர்களை ஷை கூட்டத்திற்கு அக்ராஸனராக பிரேரிக்க ஸ்ரீ ஸ்ரீநிவாஸனால் ஆமோதிக்கப்பட்டு ஆஸநமமர்ந்ததும் அக்ராஸனர் அவர்கள் மதத்தின் விவரமும் ஆஸ்திகமதத்தின் மேன்மையும் வர்ணாச்ரமங்களின் பிரிவும் அதில் கிரஹஸ்தாச்ரமத்தின் உயர்வும் அதற்குக்காரணமானவிவாஹவிவரமும் பால்யவிவாஹ நன்மையும் நவீனவயது விவாஹத்தீமையும் தெரிவித்து ஷை மசோதாவைக கண்டித்தார்கள். பிறகு ஷை மசோதாவைக் கண்டித்து எல்லோராலும் ஏகோபித்துத்தீர்மானம் நிறைவேற்றி ஷை தீர்மானங்களை மாகாணாதிபதிக்கும் தேசாதிபதிக்கும் அனுப்பும்படி அக்ராஸனருக்கு அதிகாரம் கொடுத்துப்பிறகுஇப்பெருங்கூட்டம் கலைவுற்றது.

ஸ. ஸுப்பிரமணிய அயயர்,
குன்னியூர்.

மாயவரம்.

இவ்வூர் காவேரிஜபமண்டபத்தில் ஒரு மஹாஜன ஸங்கம் கூடியது. அதில் சுமார் 300-பேர்களுக்குமேல் விஜயம் செய்திருந்தார்கள். ஸபையோர்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீமான் வால்மீகி T. S. நடேசசாஸ்திரியள் அக்கிராஸனம் வகித்தார். துவக்கத்தில் அக்ராசனரால் முகவுரையாகச் சில வார்த்தைகள் இம்மசோதாவைக் கண்டித்து பேசியபிறகு கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளின் மடத்துப் பிரசாரகவித்வான் V. ஜகதீசுவரசாஸ்திரியள் இந்த மசோதாவால் ஏற்படும் கஷ்டங்களை சாஸ்திரவாயிலாகவும் யுக்திகளாலும் உபன்யஸித்து எடுத்துக் காட்டினார்கள்.

பிறகு இந்தியா சட்டசபையிலும்சென்னை சட்டசபையிலும் கொண்டுவரப்படும் விவாஹவயது மசோதா ஸம்போகவயது நிர்ணயமசோதா முதலானவைகள் இந்துக்களுடைய வர்ணாச்ரம தர்மாநுஷ்டானங்களுக்கும் சாஸ்திரங்களுக்கும் முற்றிலும் விரோதமாயிருப்பதால் அவைகளை இம்மஹாநாடு அழுத்தமாகக்கண்டிக்கிறதென்று ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீனிவாஸய்யங்காரால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை எல்லாஜனங்களும் ஏகமனதாய் அங்கிகரித்து இதைகவர்ன்மெண்டாருக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பும்படி அக்ராஸனருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள், பிராமணரல்லாத வர்ணாச்ரம நண்பர்களுக்கும் இம்மசோதா சட்டமானால் பாதகமேற்படுமாகையால் அவர்களும் இதில் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த சபை கேட்டுக்கொள்ளுகிறது.

டி. ராகவாசியார். திருவிழந்தூர்.

## குன்னக்குடி.

திருப்பத்தூர் தாலூகா குன்னக்குடி கிராமத்தில் 12–2–28ல் இம்மசோதா சம்பந்தமான ஓர் கண்டன மகாசபை கூடிற்று. அதில் பல கிராமங்களிலிருந்தும் அனேகம் ஜனங்கள் வந்திருந்தார்கள். அச்சமயம் ஷை யூர் மகா-ா-ஸ்ரீ டாக்டர் S. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார்கள். அக்கிராசனாதிபதியவர்களின் பிரேரேபணையின்பேரில் ஷை யூர் வித்யாபிவர்த்தனீசபா கார்யதர்சியான பிர்மஸ்ரீ நாகஸ்வாமிசாஸ்திரியள் அவர்கள் பல பிரமாணங்களைக்கொண்டு இந்த மசோதாக்கூடாதென்று கண்டித்தபிறகு ஷை நகர் ஷண்முகவித்யாசாலை பண்டிதரான பிர்மஸ்ரீ ராமஸ்வாமிசாஸ்திரியளவர்கள் ஷை நாகஸ்வாமி சாஸ்திரியள் நிரூபணம் செய்த விஷயங்களை ஆமோதித்து இந்த மசோதா சுருதி ஸ்மிருதி சிஷ்டாசாரங்களுக்கு விரோதமென்பதைப் பலமேற்கோளுடன்நன்கு விளக்கிககாட்டி நன்றாகஉபன்யஸித்தார்கள்.

பிறகு இந்த மசோதா எவ்விதத்தாலும் சட்டசபையில் பிரவேசிக்க அருகமில்லை என்று எல்லோராலும் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டு இத்தீர்மானத்தை நம் காருண்யமுள்ள கவர்ன்மெண்டாருக்கு அனுப்பும்படி அக்ராசனாதிபதியிடமும் கேட்டுக்கொண்டு வந்தனோபசாரத்துடன் சபை முடிவுபெற்றது.

ஆர். எம். பாலசுப்பிரமணிய சர்மா,
ஷண்முகவித்யாசாலை,
குன்னக்குடி.